22nd August 1960]

(ஆ) கால்நடை மருத்துவப் பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்பட்டு அதன்பின் நியமிக்கப்படுகின்றனரா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) The Inspectors of the Co-operative Department appointed for the Supervision of Co-operative Cattle Breeding Societies were not given veterinary training. They have since been replaced by Stockmen of the Department of Animal Husbandry.

Sprayers

* 375 Q.—SRI A. VEDARATHNAM (on behalf of SRI N. R. THIAGARAJAN): கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பூச்சி நாசினி மருந்தடிக்கும் ஸ்பிரேயர்கள், மதுரை ஜில்லாவுக்கு எத்தனை சப்ளை செய்யப்பட்டன?

(ஆ) பிளாக் ஏரியாக்களில் எத்தனை விநியோகிக்கப் பட்டன?

(இ) பிளாக் அல்லாத பகுதிகளில் எங்கெங்கு கொடுக்கப் பட்டன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) to (c) A paper [a] is placed on the Table of the House.

Cultivable fallow lands

* 376 Q.—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயத்துக்கு லாயக்காகவுள்ள தரிசு நிலங்கள் எந்தெந்த இடங்களிலே எத்தனை ஏக்கர்கள் இருக்கின்றன என்ற விவரங்களைத் தெரிவிக்கும் ஜாபிதா ஒன்றைத் தயாரித்து, சர்க்காருக்கு அறிவிக்கும்படியாக ரெவின்யு போர்டு மூலம் ஜில்லா கலெக்டர்களுக்கு உத்திரவு அனுப்பப்பட்டதா?

(ஆ) மேற்கண்ட ஜாபிதா தயாரிக்கப்பட்டிருப்பின் அங்கத்தினர்களின் பார்வைக்கு ஒரு நகல் நூல் நிலையத்தில் வைக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir. The Board of Revenue has been instructed to take action to ascertain the extent out of the lands classified as "cultivable waste" and which is really cultivable and bring the area under plough as quickly as possible.

(b) A list showing the villagewise particulars of waste lands fit for cultivation is being compiled by the Board and it will be placed in the Legislative Assembly Library on receipt.

SRI P. G. MANICKAM: ஸார், சென்னை ராஜ்யத்திலே, சாகுபடிக்கு லாயக்கான, 19,79,120 ஏக்கர், தரிசு நிலங்கள் இருக்கின்றன என்று அரசாங்கத்தால் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன. அவை எந்தெந்த இடங்களில் இருக்கின்றன? அவ்வாறு உள்ள நிலங்களை, நிலமில்லாத விவசாயிகளுக்கும், ஹரிஜனங்களுக்கும்

a Printed as Appendix IV on page 415-infra.

[22nd August 1960

பகிர்ந்து கொடுக்க நடவடிக்கை எடுத்து, சம்பந்தப்பட்ட கலெக்டர்களுக்கு அறிவிக்கப்படவில்லையானால், இனிமேலாவது அப்படித் தெரியப் படுத்தி, பகிர்ந்து கொடுக்க சர்க்கார் கவனம் செலுத்துவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கலெக்டர்களுக்கும் இந்த விஷயமாக வேண்டிய உத்தரவுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. விவரங்களைத் தொகுத்து, அந்தத் தொகுப்பு சட்ட மன்ற நூல் நிலையத்தில் வைக்கப்படும்.

SRI K. ANBAZHAGAN: தரிசு நிலங்களைப் பயன் படுத்த உரிய முறையில் வசதி செய்- கொடுக்கும் வகையில், அவற்றைப் பண்படுத்திக் கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விவரங்கள் தெரிந்த பிறகு, அந்த நிலங்களைப் பயிர் செய்ய என்ன செய்யலாம் என்று கவனிக்கப்படும். திருத்திக் கொடுக்கலாம் ; ஆனால், தண்ணீர் வசதி இல்லாவிட்டால், திருத்திய பிறகு உபயோக மில்லாமல் போய்விடும். அம்மாதிரித்தான் ஆத்தூரில், சேலம் ஜில்லாவில் நாங்கள் கண்டது. ஆகவே, எல்லாவற்றையும் சேர்த்துப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

MR. SPEAKER: கனம் அங்கத்தினர் மாணிக்கம்.

SRI K. B. S. MANI: இந்தத் தரிசு நிலங்களைச் செவ்வனே சாகுபடி............

MR. SPEAKER: கனம் அங்கத்தினர் " மாணிக்கம் " என்று கூப்பிட்டேன் ; கனம் அங்கத்தினர் ஸ்ரீ மணி அவர்களுக்கு அடுத்த சான்ஸ் கொடுக்கிறேன்.

SRI P. G. MANICKAM: அரசாங்கத்தால், சீலிங் மூலமாக இரண்டு லட்சம் ஏக்கராக்கள் கிடைக்கும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால், புறம்போக்கு நிலங்கள் 19 லட்சம் ஏக்கர் இருக்கிறது. இவற்றை ஏழை ஹரிஜனங்களுக்குப் பகிர்ந்து கொடுத்தால், அவர்களது பொருளாதார வாழ்வு அதிகமாக உயரும். ஆகவே, அதைச் சர்க்கார் ஆராய்ந்து, தக்க செய்து மற்ற வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : புள்ளிவிவரங்களை மட்டும் வைத்துக் கொண்டு நாம் ஒரு முடிவுக்கு வரமுடியாது. 19 லட்சம் ஏக்கராக்களும் பயிர் செய்யக் கூடிய நிலங்கள்தான் என்றால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

SRI K. B. S. MANI: ஸார், இம்மாதிரிப் பயிர் செய்யச் சரியான தகுதி உள்ள நிலங்களை உடனடியாக "மதராஸ் ஸேப்பர்ஸ் அண்ட் மைனர்ஸ்" என்ற மிலிட்டரி போர்ஸை வைத்து, அவர்கள் கெட்டிக்காரர்கள் ஆனதினால், அவற்றைச் சாகுபடிக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பே விடையளித்தேன். எந்தெந்த வகையில் திருத்த முடியுமோ, அப்படிச் செய்து மற்ற வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

22nd August 1960]

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : ஸார், இப்பொழுது இந்தத் தரிசு நிலங்களில் சாகுபடி செய்திருக்கும் விவசாயிகளை என்ன காரணத்திற்காகவோ "எவிக்ஷன்" செய்கிறார்கள். அதிகமாக உணவு உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொல்லும் போது, இம்மாதிரிப் புறம்போக்கு நிலங்களிலிருந்து அவர்களை "எவிக்ஷன்" செய்யாமல் இருக்க தக்க உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்காரோ, அதிகாரிகளோ, நடவடிக்கை எடுப்பது, அந்தந்தப் பிராந்தியத்தைப் பொறுத்தது.

SRI A. GOVINDASAMY : உணவு திட்டத்தின் கீழ் உழைத்துப் பயிரிடும் ஏழை ஆதித் திராவிட மக்களுக்குச் சர்க்கார் அபராதம் போடுவதைத் தடைசெய்ய முயற்சிக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆட்சேபகரமாக இருந்தால், அபராதம் விதிக்கப்படும்.

Cinchona plantation workers in Anamalais Hills

377 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) Whether gratuity, maistries abolition, compensation, lay of compensation and leave wages will be given to Cinchona Plantation Workers in Anamalais hills as in the case of other plantation workers; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) Leave with wages is already being given to the workers in the Cinchona Plantations on the Anamalais and the Nilgiris according to the provisions of the Plantation Labour Act, 1951, and the Rules framed thereunder as in the case of other plantation workers. The question of extending to the Cinchona Plantation Workers the other benefits such as gratuity and the maistries abolition, is under consideration of the Government. There are no cases of lay off of the workers in the Government Cinchona Plantation at present. The question of payment of lay off compensation as per the provisions of the Industrial Disputes Act, 1947 as amended is under the consideration of the Government.

SRI N. K. PALANISAMI : Since the matter is pending before the Government for a long time, may I know why the Government could not take an early decision on this matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government are in consultation with the Commissioner of Labour. As soon as we receive a reply from him, action will be taken.